**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 131/மா/2022**

**நாள் : 17.11.2022**

திரு. R. செந்தில்குமார்,
கம்பரசம்பேட்டை,
திருச்சிராப்பள்ளி – 620101. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
ஸ்ரீரங்கம் கோட்டம்,
திருச்சிராப்பள்ளி. – எதிர்மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கம்பரசம்பேட்டை, வடக்குத்தெரு, எண்.4/2–ல் வசிக்கும் திரு. R. செந்தில்குமார் என்பவரின் 16.08.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.08.2022-ல் பெறப்பட்டு 131/மா/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கம்பரசம்பேட்டை, வடக்குத்தெரு, எண்.4/2–ல் வசிக்கும் திரு.R. செந்தில்குமார் என்பவர் தனது முறையீட்டு மனுவில், கீழ்க்கண்ட குற்றச்சாட்டுக்களை தெரிவித்துள்ளார்:

“திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் –1 மெயின்கார்டு கேட் பகுதியில் அமைந்து இருக்கும் மங்கள் & மங்கள் நகை கடை தொல்லியல் துறை விதிகளின்படி மலைக்கோட்டையை சுற்றி 300 மீட்டர் சுற்றளவு பகுதியில் புதியதாக கட்டடம் கட்ட அனுமதி

கிடையாது. மற்றும் 9 மீட்டருக்கு மேல் கட்டடம் உயரம் அமையக்கூடாது. மேலும் மாநகராட்சி சட்ட விதிகளை பின்பற்றாமலும் சட்டத்திற்கு புறம்பாகவும் கட்டப்பட்டுள்ளது. இதில் விதி மீறல் இருப்பது தெரிந்தும் நடவடிக்கை எடுக்க வேண்டிய ஸ்ரீரங்கம் மாநகராட்சி உதவி ஆணையர் அவர்கள் கண்டும் காணாமலும் கை கட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கிறார். இந்த வணிகவளாகத்தை ஆய்வு செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்கவும் ஸ்ரீரங்கம் உதவி ஆணையர் மீது நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவ 23.08.2022 நாளிட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது.

3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ 07.10.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 18.10.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைக்கப்பட்டனர்.

4) மனுதாரர் விபத்தில் சிக்கி மருத்துவ சிகிச்சையில் உள்ளதால் 11.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை என தொலைபேசி மூலம் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

5) திருச்சிராப்பள்ளி, ஸ்ரீரங்கம் உதவி ஆணையர் தனது 14.10.2022 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" தொல்லியல் துறை அனுமதி எண்.565/NMA/CA(TN)/2015/2890 நாள் 27.03.2017, அனுமதியின் பேரிலும், அதனை தொடர்ந்து திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் அவர்களின் 19.06.2017 ஒப்புதல் அனுமதி பெறப்பட்டு, திருச்சிராப்பள்ளி ஸ்ரீரங்கம் உதவி ஆணையரின் செயல்முறை திட்ட அனுமதி எண்.79/2017(ஸ்ரீ) மற்றும் கட்டிட அனுமதி எண்.எப்1/தி.வி.க.எண்.86/2017(ஸ்ரீ) நாள் 20.06.2017 என்ற எண்ணில் திரு S. மங்கிலால் என்பவருக்கு ஸ்ரீரங்கம் கோட்டம், வார்டு எண்.N, பிளாக் எண்.33, நகரளவு எண்.139, கதவு எண்.18, (Stilt பரப்பு 57.64 ச.மீ., முதல் தளம் 57.64 ச.மீ. மற்றும் 2–வது தளம் 57.64 ச.மீ. ஆக கூடுதல் 172.92 ச.மீ. ) இரட்டைமால் தெரு என்ற முகவரிக்கு கட்டட அனுமதி மற்றும் திட்ட அனுமதி ஸ்ரீரங்கம் கோட்டம், உதவி ஆணையர் செயல்முறை வாயிலாக உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தொல்லியல் துறை அனுமதி 561/NMA/CA(TN)2015/2898. நாள். 27.03.2017, அனுமதியின் பேரிலும், அதனை தொடர்ந்து திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் அவர்களின் 19.06.2017 ஒப்புதல் அனுமதி பெறப்பட்டு, ஸ்ரீரங்கம் உதவி ஆணையர் அவர்களின் செயல்முறை திட்ட அனுமதி எண்.80/2017(ஸ்ரீ) மற்றும் கட்டிட அனுமதி எண்.எப்1/தி.விக.வி.எண்.87/2017(ஸ்ரீ) நாள். 20.06.2017 என்ற எண்ணில் திரு S. பாபுலால் என்பவருக்கு ஸ்ரீரங்கம் கோட்டம், வார்டு N. பிளாக் எண்.33, நகரளவு எண்.139, கதவு எண்.19, (Stilt பரப்பு 57.64 ச.மீ., முதல் தளம் 57.64 ச.மீ, மற்றும், 2வது தளம் 57.64 ச.மீ ஆக கூடுதல் 172.92 ச.மீ.) இரட்டைமால் தெரு என்ற முகவரிக்கு கட்டட

அனுமதி மற்றும் திட்ட அனுமதி ஸ்ரீரங்கம் கோட்டம், உதவி ஆணையரால் செயல்முறை வாயிலாக உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட இரண்டு கட்டட உரிமையாளர்கள் திரு.S. மங்கிலால் மற்றும் திரு.S. பாபுலால் என்பவர் திட்ட அனுமதி மற்றும் கட்டட அனுமதி பெற்ற அனுமதிக்கு மாறுதலாகவும், கூடுதலாகவும் விதிகளை மீறி கட்டடம் கட்டியதற்கு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் 1994 பிரிவு 282(1&2)–ன் கீழ் அறிவிப்பு 20.09.2018 அன்று முதல் அறிவிப்பு வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 282(3), (471)–ன் கீழ் மாநகராட்சி சட்ட விதிகளை மீறி மாறுதலாகவும், கூடுதலாகவும் கட்டடம் கட்டப்பட்டது உறுதி செய்து 15.10.2018 அன்று 2–வது அறிவிப்பு வழங்கப்பட்டது. மேற்கண்ட இரு அறிவிப்புகளுக்கும் கட்டட உரிமையாளர்களால் எவ்வித பதிலும் வழங்கப்படாததால் அதன் தொடர் நடவடிக்கையாக திருச்சிராப்பள்ளி மாவட்ட குற்றவியல் நீதிமன்றம்–1ல் குற்றத்தாள் 12.11.2018ல் தாக்கல் செய்யப்பட்டது. மேற்கண்ட கட்டட உரிமையாளர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு திருச்சிராப்பள்ளி மாவட்ட குற்றவியல் நீதிமன்றம்–1ல் வழக்கு எண். STC No.908/2018ல் திரு s. மங்கிலால் அவர்களால் ரூ.1000/– அபராதத்தொகையும் மற்றும் வழக்கு எண்.STC No.907/2018ல் திரு. S. பாபுலால் அவர்களால் ரூ.1000/– அபராதத்தொகையும் தனித்தனியே மேற்கண்ட குற்றவியல் நீதிமன்றத்தில் செலுத்தப்பட்டது.

மேலும் கட்டடத்தின் மீது தொடர் நடவடிக்கையாக தமிழ்நாடு நகர ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 49,56( 2A), 57–ன் கீழ் மாநகராட்சி பகுதியில் அனுமதிக்கு மாறாகவும், போதிய பக்கத்திறவிடம் விடப்படாமலும் கூடுதல் தளங்கள் கட்டப்பட்டதை சரிசெய்யும் பொருட்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 282(1&2) (3)ன் கீழ் அறிவிப்பு வழங்கியும் அவர்களிடமிருந்து எவ்வித முகாந்திரமும் கிடைக்கப்பெறாததால், தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 49,56(2A) & 57ன் கீழ் பூட்டி முத்திரையிடப்படும் என அறிவிப்பு 14.12.2018ல் மேற்கண்ட இரு கட்டட உரிமையாளர்களுக்கும் வழங்கப்பட்டது. அறிவிப்பு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து கட்டட உரிமையாளர்கள் விதி மீறி கட்டப்பட்ட கட்டடத்திற்கு திரு S.மங்கிலால் மற்றும் திரு. S. பாபுலால் ஆகியோர் திருத்திய வரைபடம் சமர்ப்பித்து, அதற்கு அனுமதி வழங்க கோரியதை உதவி ஆணையரால் மறுத்து அறிவிப்பு வழங்கப்பட்டது.

அதனை தொடர்ந்து மனுதாரர்களால் Sec 80A-–ன்படி திருத்திய வரைபடம் சமர்ப்பித்து, அனுமதி வழங்க கோரி சென்னை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, அரசு செயலர் அவர்களுக்கு மேல் முறையீட்டு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது. மேற்கண்ட மேல் முறையீட்டு விண்ணப்பம் மீது இருவருக்கும் 05.02.2019 நேரடி விசாரணைக்கு ஆஜராக தெரிவிக்கப்பட்ட நிலையில் அதனிடையே 05.01.2019 அன்று மேற்கண்ட கட்டத்திற்கு Status Quo உத்தரவு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, கூடுதல் செயலர் (தொழில்நுட்பம்) அவர்களால் உத்தரவு எண். 26949.UD-4(1)/2018-1, 26947/UD-4(1)/2018-1, நாள்.05.01.2019ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மேல் முறையீட்டுதாரர்கள் திரு S.மங்கிலால் மற்றும் திரு. S. பாபுலால் ஆகியோரின் Sec 80A மேல் முறையீட்டு மனு நிராகரிக்கப்பட்டு வீட்டு வசதி

மற்றும் நகர்ப்புர வளர்ச்சித்துறையின் 07.12.2020 நாளிட்ட கடிதத்தின் மூலம் உரிய அமலாக்க நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து மேற்கண்ட உரிமையாளர்கள் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறைக்கு 21.12.2020ல் Review and stay petition U/S -81ன்படி மேல் முறையீடு விண்ணப்பம் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, அரசு செயலர் அவர்களிடம் சமர்ப்பித்துள்ளனர். கட்டட உரிமையாளர்கள் 21.01.2021 அன்று U/S 113-C of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 கட்டட வரன்முறைப்படுத்துதல் திட்டம்–2017ன்படி கதவு எண் 18,19,20,21 மற்றும் 22 ஆகிய முகவரியில் உள்ள கட்டடங்களுக்கு உரிய கட்டணத்தொகை ரூ.1,15,000/– யை (Receipt No.DTCP/Reg-113-C/619/2021) 20.01.2021 அன்று செலுத்தப்பட்டு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அலுவலகத்திற்கு 05.02.2021 அன்று மனுதாரரால் கட்டிடங்களை வரன்முறைப்படுத்துவதற்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு, நடவடிக்கையில் உள்ளது என்ற விவரம் தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவத்திற்கு அறிக்கையாக சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

6) 18.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம்–1 ஸ்ரீரங்கம் உதவி ஆணையர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் என்.எஸ்.பி ரோடு இரட்டைமால் தெருவில் அமைந்துள்ள மங்கள் & மங்கள் நகைக்கடை அமைந்துள்ள கட்டடம் திட்ட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அக்கட்டிடத்திற்கு 14.12.2018ல் Lock and Seal Notice வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து விதி மீறி கட்டப்பட்ட மேற்கண்ட கட்டிடத்திற்கு மனுதாரரால் திருத்திய வரைபடத்துடன் வீட்டுவசதித்துறையில் மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட முறையீட்டை ரத்து செய்து உரிய அமலாக்க நடவடிக்கை எடுக்குமாறு 07.12.2020 நாளிட்ட கடிதத்தின் மூலம் உத்தரவிட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து கட்டட உரிமையாளர்களால் மீண்டும் அரசுக்கு மறு ஆய்வு மனு செய்யப்பட்டு தற்போது நிலுவையில் உள்ளது. மேற்கண்ட முறையீட்டு மனுவின் மீதான அரசின் இறுதி உத்தரவின்படி மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேலும் என்னால் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் 14.10.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7) முறையீட்டு மனுதாரரின் மனு, திருச்சிராப்பள்ளி ஸ்ரீரங்கம் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன:

மனுதாரர் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் –1 மெயின்கார்டு கேட் பகுதியில் அமைந்து இருக்கும் மங்கள் & மங்கள் நகை கடை தொல்லியல் துறை விதிகளின்படி

மலைகோட்டையை சுற்றி 300 மீட்டர் சுற்றளவு பகுதியில் புதியதாக கட்டிடம் கட்ட அனுமதி கிடையாது. மற்றும் 9 மீட்டருக்கு மேல் கட்டிடம் உயரம் அமையக்கூடாது. மேலும் மாநகராட்சி சட்ட விதிகளை பின்பற்றாமலும் சட்டத்திற்கு புறம்பாகவும் கட்டப்பட்டுள்ளது. இதில் விதி மீறல் இருப்பது தெரிந்தும் நடவடிக்கை எடுக்க வேண்டிய ஸ்ரீரங்கம் மாநகராட்சி உதவி ஆணையர் அவர்கள் கண்டும் காணாமலும் கை கட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கிறார். இந்த வணிகவளாகத்தை ஆய்வு செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்கவும் ஸ்ரீரங்கம் உதவி ஆணையர் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படியும் இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

திருவாளர்கள் S.மங்கிலால் மற்றும் S. பாபுலால் இருவருக்கும் ஸ்ரீரங்கம் கோட்டம், வார்டு எண்.N, பிளாக் எண்.33, நகரளவு எண்.139, கதவு எண்.18, (Stilt பரப்பு 57.64 ச.மீ. முதல் தளம் 57.64 ச.மீ. மற்றும், 2வது தளம் 57.64 ச.மீ. ஆக கூடுதல் 172.92 ச.மீ. இரட்டைமால் தெரு என்ற முகவரிக்கு கட்டட அனுமதி மற்றும் திட்ட அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன இருவரும் திட்ட அனுமதி மற்றும் கட்டட அனுமதி பெற்ற அனுமதிக்கு மாறுதலாகவும், கூடுதலாகவும் விதிகளை மீறி கட்டடம் கட்டியதனால் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் 1994 பிரிவு 282 (1 & 2)–ன் கீழ் அறிவிப்பு 20.09.2018 அன்று முதல் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது அதனை தொடர்ந்து மாநகராட்சி சட்டம் பிரிவு 282(3), (471)–ன் கீழ் மாநகராட்சி சட்ட விதிகளை மீறி மாறுதலாகவும், கூடுதலாகவும் கட்டடம் கட்டப்பட்டது உறுதி செய்து 15.10.2018 அன்று 2–வது அறிவிப்பும் வழங்கப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்ட குற்றவியல் நீதிமன்றம் 1–ல் குற்றத்தாள் 12.11.2018ல் தாக்கல் செய்யப்பட்டதின் அடிப்படையில் மேற்கண்ட கட்டட உரிமையாளர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு திருச்சிராப்பள்ளி மாவட்ட குற்றவியல் நீதிமன்றம்–1ல் வழக்கு எண். STC No. 908/2018ல் திரு S. மங்கிலால் அவர்களால் ரூ.1000/– அபராதத்தொகையும் மற்றும் வழக்கு எண். STC No. 907/2018ல் திரு S. பாபுலால் அவர்களால் ரூ.1000/– அபராதத்தொகையும் தனித்தனியே மேற்கண்ட குற்றவியல் நீதிமன்றத்தில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் கட்டடத்தின் மீது தொடர் நடவடிக்கையாக தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 49, 56 (2A), 57–ன் கீழ் மாநகராட்சி பகுதியில் அனுமதிக்கு மாறாகவும் போதிய பக்கத்திறவிடம் விடப்படாமலும் கூடுதல் தளங்கள் கட்டப்பட்டதை சரி செய்யும் பொருட்டு அறிவிப்பு வழங்கியும் அவர்களிடமிருந்து எவ்வித முகாந்திரமும் கிடைக்கப்பெறாததால் பூட்டி முத்திரையிடப்படும் என அறிவிப்பு 14.12.2018ல் மேற்கண்ட இரு கட்டட உரிமையாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அறிவிப்பு வழங்கப்பட்டதனை தொடர்ந்து கட்டட உரிமையாளர்களால் விதிமீறி கட்டப்பட்ட கட்டடத்திற்கு திரு S.மங்கிலால் மற்றும் திரு. S. பாபுலால் என்பவர்கள் திருத்திய வரைபடம் சமர்ப்பித்து அதற்கு அனுமதி வழங்க கோரியதை உதவி ஆணையர், திருத்திய வரைபடம் அனுமதி கோரியதை மறுத்து அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளதையும் ஆவணங்களின் மூலமாக அறிய முடிகிறது.

அதனை தொடர்ந்து மனுதாரர்கள் திருத்திய வரைபடம் சமர்ப்பித்து அனுமதி வழங்க கோரி சென்னை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, அரசு செயலர் அவர்களுக்கு மேல்முறையீட்டு விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளனர். மேற்கண்ட மேல்முறையீட்டு விண்ணப்பம் தொடர்பாக இருவரும் 05.02.2019 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனிடையே 05.01.2019 அன்று மேற்கண்ட கட்டடத்திற்கு Status Quo

உத்தரவு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, கூடுதல் செயலர் (தொழில்நுட்பம்) அவர்களால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மேல்முறையீட்டுதாரரால் திரு S.மங்கிலால் மற்றும் திரு S.பாபுலால் என்பவர்களின் Sec 80A மேல் முறையீட்டு மனு நிராகரிக்கப்பட்டு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அலுவலக கடிதம் மூலம் உரிய அமலாக்க நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேற்கண்ட உரிமையாளர்கள் Review and stay petition u/s 81ன்படி மேல் முறையீடு விண்ணப்பம் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, அரசு செயலர் அவர்களிடம் சமர்ப்பித்துள்ளார்கள். கட்டட உரிமையாளர்களால் 21.01.2021 அன்று (u/s 113 C of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 ) கட்டட வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017ன்படி கதவு எண்.18,19,20,21 மற்றும் 22 ஆகிய முகவரியில் உள்ள கட்டடங்களுக்கு உரிய கட்டணத்தொகை ரூ.1,15,000/– யை Receipt No. DTCP/Reg-113-C/619/2021, நாள் 20.01.2021 அன்று செலுத்தப்பட்டு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அலுவலகத்திற்கு மீண்டும் 05.02.2021 அன்று மனுதாரரால் கட்டிடங்களை வரன்முறைப்படுத்துவதற்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு, நடவடிக்கையில் உள்ளது என்பதனை உதவி ஆணையர் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது.

எனினும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD 4 (3) துறை அரசாணை (நிலை) எண்.111 நாள் 22.06.2017ல் Application for exemption என்ற தலைப்பின் கீழ் வரிசை எண் 3(4)ல் பின்வருமாறு தெளிவுரை வழங்கியுள்ளது.

xxx xxx xxx

Filing an application for exemption under these regulations will not in any way prevent the competent authority from taking action under any of the provisions of the Act unless otherwise ordered so by the competent authority.

xxx xxx xxx

ஆனால் இந்நேர்வில் திரு. S. மங்கிலால் மற்றும் S. பாபுலால் ஆகியோரால் தொடரப்பட்ட தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 80 Aன் கீழான மேல் முறையீடு, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை கூடுதல் செயலாளர் அவர்களால் 07.12.2020 அன்று நிராகரிக்கப்பட்ட பின்னரும் 23 மாதங்களாக தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971ன் கீழ் எந்த வித தொடர் நடவடிக்கையும் எடுக்காமல் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அலுவலர்கள் மெத்தனமாக இருந்துள்ளனர். இதனை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 49, 56 (2A)ன் கீழ் பூட்டி முத்திரை இடப்படும் அறிவிப்பு 14.12.2018ல் வழங்கப்பட்ட பின்னர் தொடர் நடவடிக்கையாக Demolition Notice கொடுக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். கட்டட உரிமையாளர்களால் 21.01.2022 அன்று (u/s 113C of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 ) கட்டட வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017ன்படி மேற்கண்ட முகவரியில் உள்ள கட்டடத்திற்கு உரிய கட்டணம் செலுத்தி வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறைக்கு 05.02.2021 அன்று மனுதாரரால் கட்டடம்

வரன்முறைபடுத்துவதற்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டபோதிலும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்(UD 4(3) துறை அரசாணை (நிலை) எண்.111 நாள் 22.06.2017ல் வழங்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட தெளிவுரையின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

xxx xxx xxx

" Filing an application for exemption under these regulations will not in any way prevent the competent authority from taking action under any of the provisions of the Act unless otherwise ordered so by the competent authority "

xxx xxx xxx

எனவே மெத்தனமாகவும் கடமை தவறியும் செயல்பட்ட சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The Commissioner, Tiruchirapalli Corporation is directed to proceed with further action against the commercial complex as per Town and Country Planning Act provisions though it is belated inordinately. The field officials responsible for this omission should be chargesheeted unsparingly in order to set a good precedent for the other field staff to learn a lesson and acquit themselves in a responsible manner. The DMA is instructed to ensure that the directions of the Forum are executed by the Trichirapalli Corporation scrupulously.

2022-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. R. செந்தில்குமார்,
   4/2, வடக்கு தெரு,
   கம்பரசம்பேட்டை,
   திருச்சிராப்பள்ளி – 620 101.
2. ஆணையர்,
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
   திருச்சிராப்பள்ளி.
3. துணை ஆணையர்,
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
   திருச்சிராப்பள்ளி.

4. உதவி ஆணையர்,
   ஸ்ரீரங்கம் கோட்டம்,
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
   திருச்சிராப்பள்ளி.
5. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

6. இணை இயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்